Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Devotion in Minor Literature

**Dr. K. Kavitha,** Assistant Professor, Sree Ayyappa College for Women, Chunkankadai, Kanyakumari, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0007-1851-3612**
Received: 31 March 2025; Revised: 17 April 2025; Accepted: 29 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*There are many types of short stories written in Tamil. These short stories flourish without diminishing the harmony of Tamil. Short stories play a significant role in the history of Tamil literature. Tamil short stories excel with a variety of poetic themes such as history, love, war stories, justice, social life, devotion, philosophy, etc. The period when short stories appeared in Tamil is very ancient and is well-documented. The Sangam period is considered to be the golden age in the history of Tamil literature. The ancient Tamil epics "Ettuthogai" and "Patuppattu" emerged during this period. The collections of many individual poems and literature composed individually by poets emerged during this period. "Thirumurukatruppadai", "Sirupanatruppadai," "Perumpanatruppadai," "Porunaratruppadai," "Kootharatruppadai", or "Malaipadukadam" are considered to be the Tamil Minor Literature (Chitrilakyam). Since the Atruppadai books mentioned here originated in the Sangam period, it can be understood that the origin of the Minor Literature is the Sangam period. The Minor Literature that originated in the Sangam period began to flourish and grow further from the end of the fourth century AD, the period of Bhakti Revival. Karaikalammaiyar created a decisive moment in the history of Tamil literature by creating a new type of Minor Literature. Great people like Avinashi Araikizhar, Jeyankondar, Ottakkoothar, Umapathi Sivachariyar, and Trikutaraasappa Kavirayar created new types of Minor Literature. Many later followed the new paths shown by them. It was believed that for the progress of society, the hearts of the people should be filled with a sense of God. In addition to the praise of the king, the leader of the country, hymns that praise God, the first of the world, have been shown in the Minor Literature. The devotional hymns such as "Navamanimalai," "Dwetmanimalai," "Mummanimalai," "Nanmanimalai," and "Parimanimalai" are evidence that tells us about the sense of God and the development of devotion that prevailed in the Tamil society.*

**Keywords**: Devotion, Tamil Literature, Minor Literature, Prabantham, Aatruppadai, Malai.

## References

[1] Shantha, M. S. *Sivaprakashar's Ilakkiya Noolkal Oru Thiranayvu*. Vidya Pathippagam, Chennai - 600 005, 1983.
[2] Suresh, C. Ra., Rajesh, P. *Tamil Ilakkiyankalil Panpattu Koorukalum Vazhviyal Nerimuraikalum*. Kavya Pathippagam, Chennai - 600 024, 2016.
[3] Suyambu, P. *Tamil Ilakkiya Varalaru*. Bharathi Pathippagam, Thisayanvilai – 627657, 2016.
[4] Seyaraman, N.V. *Sittilakkiyat Thiranayvu.* Ilakkiayap Pathippagam, Chennai - 18, 1980.
[5] Seyaraman, N.V. *Ilakkiyak Kovai.* Ilakkiayap Pathippagam, Chennai - 18, 1980.
[6] Chellappa, C.K. *Tamil Ilakkiya Vimarsanam*. Elutthup Pirasuram, Chennai, 1974.
[7] Muthushanmugam, Nirmalamohan. *Sittilakkiyankalin Thottamum Vakaiyum*. Muthu Pathippagam, 1979.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

[8] John Samuel, G. *Ilakkiyat Thiranayvu Mutharpakuthi*. Ulakatthamizharaycchi Niruvanam, Chennai - 600 020, 1976.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

**Academic Research News**

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# சிற்றிலக்கியங்களில் பக்தி நெறி

**முனைவர் கு. கவிதா,** உதவிப்பேராசியர், ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான் கடை, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-1851-3612**

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழில் அமைந்த சிற்றிலக்கியங்கள் பல வகையின. தமிழின் சீரிளமை குன்றாமல் இச்சிற்றிலக்கிய மலர்கள் பூத்து விளங்குகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களின் பங்கு பெரிது. வரலாறு, காதல், போர்ச் செய்திகள், நீதி, சமுதாய வாழ்வு, பக்தி, தத்துவம் முதலாய பலவகைப் பாடுபொருண்மைகளைக் கொண்டனவாய் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் மிளிர்கின்றன. சிற்றிலக்கியங்கள் தமிழில் தோன்றிய காலம் மிகுதியும் தொன்மை சான்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படும் சிறப்புடையது சங்க காலம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் தமிழின் தொன்மையான பேரிலக்கியத் தொகுப்புக்கள் இக்காலத்தில் எழுந்தன. தனிப்பாடல்கள் பலவற்றின் தொகுப்பு நூல்களும், புலவர்களால் தனித்துப் பாடப்பெற்ற இலக்கியங்களும் இக்காலத்தில் எழுந்துள்ளது. சங்க இலக்கியப் பேரிலக்கியத் தொகுப்புகள் இரண்டனுள் பத்துப்பாட்டில் பத்து நூல்கள் அமைந்துள்ளன. இவற்றில், திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம் எனவரும் ஐந்தும் ஆற்றுப்படை என்னும் சிற்றிலக்கிய நூல்களாகவே அமைந்துள்ளன. சங்க காலத்திலேலே இங்குக் குறிப்பிடப் பெறும் ஆற்றுப்படை நூல்கள் தோற்றம் பெற்றுள்ளமையால் சிற்றிலக்கியங்களின் தோற்ற காலம் சங்க காலம் என உணர முடியும். சங்க காலத்தில் தோற்றம் பெற்ற சிற்றிலக்கியங்கள், பக்தி மறுமலர்ச்சிக் காலமாகிய கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதி முதலாக மேலும் தழைத்து வளரத் தொடங்கின. காரைக்காலம்மையார் புதுவகைச் சிற்றிலக்கியங்களைத் தோற்றுவித்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உருவாக்கினார். காரைக்காலம்மையாருக்குப் பின்னர், சேரமான் பெருமாள் நாயனார். அவிநாசி ஆறை கிழார், செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், உமாபதி சிவாச்சாரியார், திரிகூடராசப்ப கவிராயர் போன்ற பெருமக்கள் சிற்றிலக்கியங்களில் புதிய வகைகளை உருவாக்கினர். இவர்கள் காட்டிய புதுத்தடங்களைப் பிற்காலத்தில் பலர் பின்பற்றினர். சமுதாய முன்னேற்றத்துக்கு மக்கள் நெஞ்சம் இறையுணர்வு உடையதாகத் திகழ வேண்டும் என்று எண்ணப்பட்டது. நாட்டுத் தலைமகனாகிய மன்னனைப் புகழ்ந்துரைப்பதோடு, உலக முதல்வனாகிய இறைவனைப் புகழ்ந்துரைக்கும் துதிநூல்களும் சிற்றிலக்கிய வரிசையில் எழுந்துள்ளன. நவமணிமாலை, இரட்டைமணிமாலை, இரட்டை மணிக்கோவை, மும்மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிகோவை, நான்மணி மாலை, இணைமணி மாலை என வரும் பக்திப் பொருண்மை தழுவிய சிற்றிலக்கியங்கள் சமுதாயத்தில் நிலவிய இறையுணர்வையும் பக்தி மேம்பாட்டையும் நமக்குக் கூறும் சான்றுகளாக உள்ளன.*

**குறிப்புச்சொற்கள்:** பக்தி, தமிழ் இலக்கியம், சிறு இலக்கியம், பிரபந்தம், ஆற்றுப்படை, மாலை.

**முன்னுரை**

மனித சமுதாய வாழ்வியல் பண்பாடுகளை விளக்கிக் காட்டும் கருவியே இலக்கியம். மொழி தோன்றிய பின்னர் நாகரிகத்தின் முதிர்ச்சி நிலையில் இலக்கியம் உருப்பெறுகின்றது. நாகரிக வளர்ச்சிக்கும், சமுதாய இயல்பிற்கும், பண்பாட்டுச் சிறப்பிற்கும், காலச் சூழலின் அமைப்புக்கும் ஏற்ப, இலக்கியமும் பல்வேறு பிரிவினதாய்ப் பல்கிப் பெருகுகிறது.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

சங்க காலத்தில் தன்னுணர்ச்சிப்பாக்கள் மிகுந்திருந்தன அகப்பொருளும் புறப்பொருளும் தழுவிய நிலையில் காதற் பாடல்களும், வீரப்பாடல்களும் எழுந்தன. புலவர்கள் அகமாந்தர்களாகவும் புறமாந்தர்களாகவும் மாறி உணர்ச்சியைச் சொல் வடிவங்களில் வெளிப்படுத்தினர். பின்னர், கதையைக் கருவாகக் கொண்டு சொல்லாலும் பொருளாலும் தொடர்ந்து செல்லும் காப்பிய நூல்கள் எழுந்தன. அதனைத் தொடர்ந்து சைவ, வைணவ அருளாளர்கள் பக்தி இலக்கியங்களைப் படைத்தனர் சாத்திர நூல்களும் உருப்பெற்றன. சங்க காலம் முதலாகக் கருக்கொண்டு மெல்ல வளர்ச்சியுற்று வந்த சிற்றிலக்கியங்கள் கி.பி, 12ஆம் நூற்றாண்டு முதல் தமிழுலகில் பெருஞ்செல்வாக்கு பெற்றன. கடவுளர்களும் குறுமன்னர்களும், வள்ளல்களும் அருளாளர்களும், ஞானியர்களும் சிற்றிலக்கிய உலகில் பாட்டுத்தலைவர்களாக ஏற்றம் பெற்றனர். தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் நிறைந்து விளங்கிய தெய்வத் திருக்கோயில்களைக் களமாகக் கொண்டு பல சிற்றிலக்கியங்கள் எழுந்தன. எளிய மக்களின் வாழ்வியல் நடைமுறையும் கூட, சிற்றிலக்கியங்களின் கருப்பொருளானது. ஒட்டக்கூத்தர், உமாபதி சிவாச்சாரியார், குமரகுருபரர், தாயுமானவர், பட்டினத்தார் பல பட்டடைச் சொக்கநாதர் போன்ற பெரும் புலவர்கள் சிற்றிலக்கிய உருவாக்கத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைத்தனர். இங்ஙனம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி சிற்றிலக்கிய நூல்களின் பொற்காலமாகத் திகழ்ந்தது. இக்கால எல்லையில் சிற்றிலக்கியங்கள் தமிழுலகில் செல்வாக்கு பெற்று விளங்கின.

**பிரபந்தம் - சிற்றிலக்கியம்**

சிற்றிலக்கியங்கள் என்ற சொல்லாட்சி அண்மைக் காலத்தில்தான் வழக்குக்கு வந்தது. இச்சொல்லாட்சி வழக்குக்கு வருவதற்கு முன்னர் பிரபந்தம் என்ற சொல்லால் சிற்றிலக்கியங்கள் குறிப்பிடப்பட்டன. பிரபந்தம் என்பது வடசொல். இதற்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருள். **“தண்டியலங்காரத்தின் காப்பியம்” என்னும் சொல் பின்னர்ப் ‘பிரபந்தம்’ என்று கூறப்பட்டது. பிரபந்தம் என்பது வடசொல். ஆதலால் அண்மைக்கால அறிஞர்கள் அதற்கு மாற்றுச் சொல்லாகச் சிற்றிலக்கியம் என்பதை வழக்கில் கொண்டு வந்துள்ளனர்” (முனைவர் பெ. சுயம்பு, ப. 285).** எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலான செய்யுள் உறுப்புக்களால் இணைக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட பாடுபொருண்மையை மையமாகக் கொண்டு ஆக்கப்படுபவை இலக்கியங்கள். இம்முறையில் இலக்கியம் என்னும் தமிழ்ச் சொல்லும் பிரபந்தம் என்ற வடசொல்லும் பொருள் நோக்கில் ஒன்றாகவே காணப்படுகின்றன. தமிழில் *எட்டுத்தொகை*, *பத்துப்பாட்டு*, காப்பியங்கள், பக்தி நூல்கள் ஆகியன இலக்கியம் என்னும் சொல்லால் குறிப்பிடப்பெற்றமையால், அந்தாதி, சதகம், பிள்ளைத்தமிழ், பரணி போன்ற இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் அவைகளைக் குறிக்க, பிரபந்தம் என்னும் வடசொல் பயன்படுத்தப்பெற்றது. பின்னர், பிரபந்தம் என்னும் சொல் இலக்கியம் என்பதையே குறிக்கும் என்பதற்காக, அந்தாதி முதலானவற்றைச் சிறு பிரபந்தங்கள் அல்லது சில்லறைப் பிரபந்தங்கள் என்று அடை கொடுத்து வழங்கும் வழக்காறு காணப்பட்டது. பின்னர் தனித்தமிழாட்சி வளர்ச்சியுள்ள காலத்தில் சிறு பிரபந்தங்கள் என்ற சொல்லால் குறிப்பிடப்பெறும் அந்தாதி முதலானவற்றைச் சிற்றிலக்கியங்கள் எனக் கூறும் வழக்கு ஏற்பட்டு நிலைப்பெற்றது “சிற்றிலக்கியம் என்ற சொல்லாட்சி இருபதாம் நூற்றாண்டில் புதிதாகத் தோன்றிய உரைநடை வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியவற்றின் தாக்கமாகவும் இருக்கலாம் என்று கூறப்படும் கருத்தும் இவண் சிந்திக்கத்தக்கது.” (டாக்டர் முத்துச் சண்முகம், நிர்மலா மோகன், பக். 4, 5)

**சிற்றிலக்கிய வகைகள்**

தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று கூறுவது இலக்கிய வழக்கு. ஆனால் இந்த எண்ணிக்கையும் நூல்களின் வகையும், சிற்றிலக்கிய அமைப்பிலக்கணத்தை விவரிக்கிற பாட்டியல் நூல்களில் வேறுபடுகின்றன. தமிழில் அமைந்துள்ள சிற்றிலக்கியங்கள் சங்க காலம் தொடங்கி கி.பி. 20ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்து வரும் சீரும் சிறப்பும்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

உடையவை. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என்னும் பட்டியலில் அடக்கிக் காட்டும் முயற்சி கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இந்தக் கால கட்டத்துக்கு முன்னர் எழுந்த ஒரு சில இலக்கிய வகைகளும் பின்னர் எழுந்த பல இலக்கிய வகைகளும் பட்டியலில் அடக்கிக் கூறப் பெறவில்லை. "இன்று வரை தமிழில் தோன்றியுள்ள இலக்கிய வகைகளின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 330 ஆகும்." (டாக்டர் ந. வீ. செயராமன், ப. 92) சிற்றிலக்கியங்கள், முடியாட்சிக் காலம் முதல் இன்றைய குடியாட்சிக் காலம் வரை நாளும் தோன்றித் தமிழைச் செழிக்கச் செய்து வருகின்றன. சமுதாய வாழ்வியலை விளக்கிக் காட்டும் பணியில் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. பேரிலக்கியங்கள் நாடக வழக்கில் கட்டுக்கோப்பான அமைப்பு முறையில், மரபுநிலை திரியாமல் பாடப்பெறுகின்றன. ஆனால் சிற்றிலக்கியங்களோ, நிலைபெறும் போராட்ட உணர்வோடு உலகியல் வழக்கில் உள்ளதை உள்ளவாறு கூறும் நிலையில், எளிய மொழியமைப்பில் பாடப்பெறுகின்றன. எனவே தான் சமுதாய நோக்கையும் போக்கையும் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் சிறந்த முறையில் வெளிப்படுத்துகின்றன.

**பக்தி சிற்றிலக்கியங்கள்**

பக்தி உணர்வை வெளிப்படுத்துவதற்குத் தமிழ்ச் சிறந்த மொழியாகும். எனவே ஒவ்வொரு சமயத்தவரும் கடவுளரைப் பாடுவதற்கும், சமயக் கோட்பாடுகளை விளக்குவதற்கும் பக்தியை வெளிப்படுத்துவதற்கும் பலவகை இலக்கியங்களைத் தமிழில் படைத்துள்ளனர்.

சிற்றிலக்கியங்களில் பெரும்பான்மையானவை பக்திச் சிற்றிலக்கியங்களாகத் திகழ்க்கின்றன. இறைவனைப் பாட்டுடைத் தலைவராக்கி காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப் பத்துப் பருவங்களில் ஆண்பாற் பிள்ளைத் தமிழும், இறுதியில் அமைந்த மூன்று பருவங்களுக்குப் பதிலாக, கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைக் கூட்டிப் பெண்பாற் பிள்ளைத் தமிழும் எழுந்தன. "பெரியாழ்வார் பாடிய சில பாசுரங்களைப் பிள்ளைத்தமிழாகக் கருதிக் கண்ணன் பிள்ளைத்தமிழ் என்று வழங்கும் மரபும் காணப்படுகிறது." (முனைவர் பெ. சுயம்பு, ப.306) பதினெட்டு வகை உறுப்புக்கள் பொருந்தி வர கலம்பக இலக்கியங்கள் எழுந்தன. இறைவன் உலா வருங்காலை எழுபருவப் பெண்டிர் காதல் கொண்டார் என்னும் கருப்பொருள் அமைய உலா இலக்கியங்கள் பாடப்பெற்றன. இறைவன் உலாவின் போது கண்ட பெண்ணொருத்தி அஃறிணை அல்லது உயர்திணைப் பொருளைத் தூது விடுத்துத் தன் காதல் கூறி, மாலை வாங்கி வருமாறு தூது இலக்கியங்கள் உள்ளன. இறைவனைத் துதிக்கும் துதிப் பொருண்மை அமைய சதக இலக்கியங்கள் எழுந்தன. இறைவன் மீது காதல் கொண்ட பெண்ணொருத்திக்கு அவள் விரும்பியவனைக் கூடுவாள் என்று குறத்தியொருத்தி குறி கூறும் குறவஞ்சி இலக்கியங்கள் வளர்ந்தன. சமயப் போராட்டத்தை மையமாகக் கொண்டு படைக்கப் பெற்ற பாத்திரங்களை வைத்து, பள்ளர் வாழ்வியல் முறைகளை விளக்கும் பள்ளு இலக்கியங்கள் உருவாயின. இவை அனைத்தும் பொருண்மை அடிப்படையில் எழுந்த பலவகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் ஆகும். "பள்ளு இலக்கியங்களுள் முக்கூடற் பள்ளுவே இலக்கிய நயமிக்கது. திருநெல்வேலி மாவட்டத்துச் சித்திரா ஆறு (சிற்றாறு), தாமிரபரணி ஆறு, கோதாண்டராமன் ஆறு மூன்றும் கூடும் இடம் முக்கூடல். அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் அழகர் பெருமானைச் சிறப்பிக்குமாறு முக்கூடற் பள்ளு இயற்றப்பட்டுள்ளது. (முனைவர் பெ. சுயம்பு, ப. 30)

கோவை இலக்கியத்தில் திருக்கோவையார், தூது இலக்கியத்தில் நெஞ்சுவிடுதூது, பரணி இலக்கியத்தில் அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி ஆகியன. குறவஞ்சி இலக்கியத்தில் ஞானக் குறவஞ்சி, பள்ளு இலக்கியத்தில் ஞானப்பள்ளு போன்றவை தத்துவச் சாயலில் அமைந்த சிற்றிலக்கியங்கள், தத்துவ விளக்கங்கள் வாயிலாகப் பக்திநெறி புலப்படுத்தப்பட்டுள்ளது. எட்டுப்பாடல்களால் வரும் அட்டமங்கலம், ஒன்பது பாடல்களால் வரும் நவமணிமாலை, பத்துப்பாடல்களால் வரும் ஒருபா ஒருபஃது, பதிகம் ஆகியன. இருபது பாடல்களால் வரும் இருபா இருபஃது, இரட்டைமணி மாலை ஆகியன. முப்பது பாடல்களால்

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

வரும் மும்மணிக்கோவை, மும்மணி மாலை, தண்டகமாலை ஆகியன. நாற்பது பாடல்களால் வரும் நான்மணிமாலை, அறுபது பாடல்களால் வரும் மணிமாலை, நூறுபாடல்கள் வரும் இணைமணிமாலை ஆகியனவற்றின் பொருண்மை பக்தியே. இறைவனைப் பாட்டுடைத் தலைவராக்கிப் பாடப்பெற்ற துதி நூல்களாக இவை விளங்குகின்றன. இவையனைத்தும் பக்திச் சிற்றிலக்கியங்கள் என்னும் பெயருக்கு உரியவை. பயின்று வரும் பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் பாவகைகளைப் பொறுத்தும் இவ்வகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் எண்ணிக்கையில் பலவாகப் பெருகியுள்ளன.

**பக்திச் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி**

பக்திச் சிற்றிலக்கியங்கள் சங்க காலத்திலேயே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். திருக்கோவையார், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, சேஷத்திரத்திருவெண்பா, பொன்வண்ணத்தந்தாதி, ஆரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா, கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, போற்றித் திருக்கலிவெண்பா, மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி, சிவபெருமான் திருமும்மணிக்கோவை, மூத்தபிள்ளையார் திரு மும்மணிக்கோவை, கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணி மாலை, திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை ஆகியன திருமுறை ஆசிரியர்களால் பாடப்பெற்ற சைவ சமயப் பக்தி இலக்கியங்கள் ஆகும். "திருக்கோவையார் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. திருக்கோவையாருக்கத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற பெயரும் உண்டு. கவிதைச் சிறப்பாலும் காலத்தாலும் பிற கோவைகளிலிருந்து முதன்மை பெற்று விளங்குகிறது. சிறப்புக் கருதியே இக்கோவை ஆர் என்னும் மரியாதை விகுதியுடன் கூறப்படுகிறது." (முனைவர் பெ. சுயம்பு, ப. 293) வைணவ ஆழ்வார்களும் பக்திச் சிற்றிலக்கியங்கள் பல தந்துள்ளனர். பன்னிரு ஆழ்வார்களால் திருமாலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, பெரிய திருவந்தாதி, இராமாநுச நூற்றந்தாதி, சிறய திருமடல், பெரிய திருமடல் ஆகியவை ஆழ்வார்கள் தந்த வைணவப் பக்திச் சிற்றிலக்கியங்கள் ஆகும். நாடெங்கும் அமைந்த திருத்தலங்களில் கோயில் கொண்டருளிய இறைவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அல்லது முன்னிலைப்படுத்திப் பலவகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. புரவலர்கள் ஆங்காங்குள்ள இறைவர் மீது சிற்றிலக்கியங்கள் பாடப் புலவர்களை ஊக்குவித்தனர். இம்முறையில் பக்திச் சிற்றிலக்கியங்கள் பலவாய்ப் பல்கிப் பெருகின. சிற்றிலக்கிய மரத்தின் பக்திக்கிளைப் பக்திச் சிற்றிலக்கியக் கனிகளால் தழைத்துப் பொலிந்தது.

**பதிகம் கூறும் பக்திநெறி**

காரக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில், திருவாலங்காட்டில் இறைவன் நிகழ்த்தும் திருக்கூத்தின் இயல்பும், அக்கூத்துக்கு உரிய ஆடரங்காக இடுகாடு விளங்குவதும் விளக்கப்பட்டுள்ளது. சிவபெருமானாகிய இறைவன் இடுகாட்டில் திருக்கூத்து ஆடும்பொழுது நீண்ட அவர் திருச்சடை எட்டுத்திசையும் வீசுகிறது. அவர் ஊழின் வலியால் இறந்த உயிர்கள் உள்ளம் குளிரவும், அமைதி அடையவும் திருக்கூத்து நிகழ்த்துகின்றார் என்பதனை,

**ஈமம் இடுசுடு காட்டகத்தே**
**ஆகம் குளிர்ந்தன லாடும் எங்கள்**
**அப்பனிடம் திரு ஆலங்காடே (திரு.மூத்திருப்பதிகம். பா. 3)**

என்ற பாடலால் மூலமும்,

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**…காரைக்காற்பேய்**
**செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்**
**சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே (திரு.மூத்திருப்பதிகம். பா. 11)**

என்ற பாடல் மூலமும் அறியலாம். தன்னிடத்து அன்பு செலுத்தும் உயிர்களுக்கு இன்பம் அருள்வது இறைபண்பு எனக் கூறுவதன் மூலம், இறைவனிடத்துப் பக்தி செலுத்த வேண்டிய இன்றியமையாமை இங்கு உணர்த்தப்படுகிறது.

**திருஇரட்டை மணிமாலை கூறும் பக்தி நெறி**

காரைக்காலம்மையார் பாடிய திருஇரட்டை மணிமாலை பக்தி நெறிகளின் பல்வேறு கோணங்களை விளக்குகின்றது. இவ்வுலக வாழ்வில் அடியாருக்குத் துன்பங்கள் வருதல் இயற்கை. துன்பங்கள் தாக்கும் போது, உள்ளம் தளராது இறைவனை எண்ணுதல் வேண்டும் சிவனை மனம் சலியாது வணங்குவோரை துயர்வந்து அணுகாது என்பதனை,

**கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி**
**நெஞ்சமென்பாய்த்**
**தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண் டாய்தள**
**ராதுவந்தி (திரு இரட்டை மணிமாலை, பா. 1)**

என்ற பாடல் உணர்த்துகிறது. இறைவனேயன்றி வேறு துணையில்லை என இடைவிடாது எண்ணுதல் வேண்டும். இறைவன் திருப்புகழையே பேசுதல் வேண்டும். இத்தகைய பக்திநெறிக் கோட்பாடுகளில் வாழும் அடியவர்களை மீண்டும் பிறவாமல் காக்கும் படி இறைவன் விளங்குகின்றான், என்பதனை,

**ஆவாஎன்று ஆழாமைக் காப்பானை**
**எப்பொழுதும்**
**ஓவாது நெஞ்சே உரை (திருஇரட்டை மணிமாலை, பா. 6)**

என்ற பாடல் மூலம் அறியலாம். இறைவனை மலர்தூவி வழிபடலும் ஒரு வகைப் பக்திநெறி என்பதனை,

**தழற்கொண்ட சோதிச் செம் மேனியெம்**
**மானைக்கைம் மாமலர்தூய்த்**
**தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி**
**நம்அடுந்தொல்வினையே (திருஇரட்டை மணிமாலை, பா. 11)**

என்ற பாடலில் இறைவன் திருப்பாதங்களைப் பக்தியுடன் என்னும் அடியவரைத் தொல்வினைகள் சாராது எனவும், இறைவனுக்கு மலர்தூவி வழிபட்டாலும் தொல்வினைகள் நம்மை நெருங்காது எனவும் கூறப்பட்டுள்ளது.

**மும்மணிக்கோவை கூறும் பக்தி நெறி**

திருவாரூர் மும்மணிக்கோவை பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் சிவபெருமானைப் பாடியது. அகப்பொருண்மையைத் தழுவி இறைவனிடம் மையல் கொண்ட பெண்ணாகத் தம்மைப் பாவித்து அகப்பொருள் ஒழுகலாற்றுடன் இந்நூலில் பக்திநெறி விளக்கப்படுகின்றது.

தலைவனைக் கூடாது இருக்கும் தலைவியின் வேதனையைச் சுட்டும் குறிப்புக்கள் இறைவனைச் சார விரும்பும் அடியவரின் உளப்பாங்கையும் நிலையையும் குறிப்பாக வெளிப்படுத்துகின்றன.

**கலைபினை திரியக் கையற வெய்தி**
**மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து**
**அல்லியங்கோதை அழலுற்றா அங்கு**
**எல்லையில் இருந்துயர் எய்தினான் (திருவாரூர் மும்மணிக்கோவை, பா. 7)**

எனவரும் பாடலில் அணிந்த உடை கட்டவிழ தனது மெல்லிய விரல்களை நெரித்து, ஏங்கி, நெடிய பெருமூச்சிட்டு, பூமாலை ஒன்று தீயில் வாடுதல் போலத் துயருற்றாள் எனத்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

தலைவியின் துயரம் நிறைந்த மனநிலை விளக்கப்படுகிறது. இந்நிலை, இறைவனைக் கூட விரும்பும் அடியவருக்கும் அமைதல் வேண்டும் என்னும் பக்திநெறி இதில் விளக்கப்பட்டுள்ளது.

**நான்மணிமாலைக் கூறும் பக்தி நெறி**

தில்லைச் சிற்றம்பவனிடத்துச் செலுத்தப்படும் பக்திபெருநெறிகளை விளக்குவது பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த கோயில் நான்மணி மாலை நுல். இறைவனின் புராண வரலாறுகள் அனைத்தும் அடியவரின் மேம்பாட்டுக்காக இறைவன் மேற்கொண்ட திருவிளையாடல்களைச் சுட்டுவன. இம்முறையில் இறைவன் பிட்சாடனராய் கீழ் நிலையில் பிச்சை ஏற்ற நிகழ்ச்சியும், தொண்டருக்கு ஏவல் செய்யும் நிகழ்ச்சியும் இந்நூலில் குறிப்பிடப்படுகிறது.

இறைவன் தன் மெய்யடியார் பெயர்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வைத்திருப்பதாகவும், இந்நூலில் தன் பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பட்டினத்தடிகள் தன் பக்திநெறியைப் புலப்படுத்துகிறார்.

**தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து**
**என்னையும் எழுத வேண்டுவன் (கோயில். நான். பா. 4)**

என்பதே அப்பாடலாகும். மற்றுமொரு பாடலில்,

**ஆடும் அம்பலக் கூத்தனைப்**
**பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே (கோயில். நான். பா. 8)**

இறைவன் திருப்புகழைப் பாடுவதும், பரவுவதும், பணிவதும் அடியவரின் பக்தி நெறி, வாயால், மனத்தால், உடலால் இறைவனை வணங்குதல் வேண்டும் என்றும் இப்பக்திநெறி விளக்கப்படுகிறது. வாக்கால் பக்திச் செலுத்துவதை,

**வாயினால் இப்போதே மன்றில் நடமாடும்**
**நாயனார் என்றுரைப்போம் நாம் (கோயில். நான். பா. 13)**

என்றும் பாடுவார். இங்ஙனம் இறைவனிடம் செலுத்தும் பக்தி நெறிகளும் இறைவன் அடியவரிடத்துக் கொண்ட பெருங்கருணைத் திறமும் இந்நூலில் இனிதுற விளக்கப்பட்டுள்ளன.

**சதகம் கூறும் பக்தி நெறி**

குமரேச சதகம் குருபாத தாசரால் முருகப்பெருமான் மீது பாடப்பெற்ற நூல். இறைவன், அன்பருக்குத் துயர் நேரும்போது ஏற்ற உதவிகளை அளிப்பவன். இறைவனை, 'மெய்த்துணை' எனக் கொண்டு ஒருமை உள்ளத்தோடு பக்தி செலுத்தும் முறையைக் குமரேச சதகம் வலியுறுத்துகிறது. இறைவனை மெய்த்துணையாக ஏற்கும் நிலையில் இல்லாத உள்ளங்களுக்குக் குமரேச சதகம் தெளவி நிலையையும் காட்டுகிறது. உலக அமைதி உண்டாக்கத் தோன்றியவன் முருகன்; சரவணப்பொய்கையில் திருவிளையாடல் புரிந்தவன்; சிவபிரானுக்கு பிரணவப் பொருளை உரைத்தவன்; நான்முகனைச் சிறையில் அடைத்தவன்; சூரபதுமன் உடலை இருகூறாக்கித் தேவரைச் சிறைவிடுத்தவன். இங்ஙனம் இறைவனின் பேராற்றலை விளக்குவதன் மூலம் பக்குவப்படாத உள்ளங்களுக்குத் தெளிவுகாட்டி, இத்தகைய பேரருளும் பெருங்கருணைத் திறனும் வாய்ந்த இறைவன் திருத்தாள்களை மெய்த்துணையாகப் பற்ற வேண்டும் என அறிவுறுத்துகின்றார். இறைவனிடம் பக்தி கொண்டவர் இரக்க நெஞ்சினராக இருப்பர் என்றும், இரக்க நெஞ்சினராய அடியாரிடத்து ஈகை என்னும் அறம் விளங்கும் என்றும், ஈகையறம் கொண்டோரிடம் பகை வெல்லும் திறம் இருக்கும் என்றும் பக்தி உணர்வு தரும் சிறப்பு நிலைகளையும் ஒன்றனைப் பற்றி ஒன்று வளரும் முறைமையையும் குருபாததாசர் சிறப்புற விளக்கியுள்ளார். பக்தி உணர்வு பலவகைப் பண்புகளையும் வளர்க்கின்றது என இதன் ஆற்றல் விளக்கப்படுகின்றது.

**பக்தியுடன் இனியதயை உள்ளவர் இடந்தனில்**
**பகர்தருமம் மிக இருக்கும்**
**பகர்தருமம் உள்ளவர் இடந்தனில் சத்துரு**

**பலாயனத் திறல் இருக்கும் (கும. சத. பா. 7)**

எனவரும் பாடல்பகுதி இதனை விளக்கும். இங்ஙனம் பக்திநெறிகளைச் சதகங்கள் சிறப்புற விளக்குகின்றன.

**அந்தாதி கூறும் பக்தி நெறி**

காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியை அடிப்படையாகக் கொண்டு, அந்தாதி கூறும் பக்திநெறிகள் இங்கு விளக்கப்பட்டுள்ளது. மொழி பயிலத் தொடங்கிய காலம் முதல் இறைவன் பெருமையைக் கூறி, இறைவன் சேவடியில் காதல் கொண்டு வாழ்ந்தால், இறைவன் உயிர்களின் இடர் தீர்ப்பான் என்பார் அம்மையார். இதனை,

**பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் (அற்.திரு. பா. 1)**

என்ற பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பக்தி நெறியில் ஒருவனையே தலைவனாகக் கொள்ளும் மனத்திண்மை இன்றியமையாதது. மற்றொரு தலைவரைச் சாரோம், மற்றொருவருக்கு ஆட்படோம், அன்பு செலுத்தோம் என்றெல்லாம் பக்தி வெளிப்பாட்டில் ஒருமைப்பாட்டு நெறியையும் அம்மையார் வலியுறுத்துகிறார். இறைவனைத் தலைவனாகக் கொண்டு, தம்மனத்தகத்து பெறலரும் வைப்பாக வைத்து வழிபடும் அடியவர்களுக்கு உலகில் அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

**எனக்கு இனிய எம்மானை ஈசனையான் என்றும்**
**மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்**
**கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்**
**உண்டோ எனக்கரிய தொன்று (அற். திரு. பா. 10)**

என்பது அம்மையார் வாக்கு.

இறைவனையே பக்தி நெறியால் அறிகின்றோம். அறிகின்ற உணர்வை அறிவிப்பவனும் இறைவனே. அறிவாக இருந்து அறிகின்றவனும் அவனே. அறிகின்ற மெய்ப்பொருளெல்லாம் அவனாகவே விளங்குகின்றான். இங்ஙனம் அவனருளால் அவன்தாள் வணங்குவது போல, அறியப்படுபவனாய், அறிவிப்பவனாய், அறிகின்றவனாய், அறியும் பொருளாய் விளங்கும் இறைவனின் பெருநிலை பக்திநெறியில் உணர்வது இன்றியமையாதது என விளக்கப்படுகிறது.

**அறிவானுந் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற**
**மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்**
**அப்பொருளுந் தானே அவன் (அற்.திரு. பா. 20)**

என்பதே அப்பாடல். இங்ஙனம் அந்தாதி இலக்கியங்கள் பக்திப் பெருநெறியை அழகுற விளக்குகின்றன.

**முடிவுரை**

சிற்றிலக்கியங்கள், முடியாட்சிக் காலம் முதல் இன்றைய குடியாட்சிக் காலம் வரை நாளும் தோன்றித் தமிழைச் செழிக்கச் செய்து வருகின்றன. சமுதாய வாழ்வியலை விளக்கிக் காட்டும் பணியில் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. பேரிலக்கியங்கள் நாடக வழக்கில் கட்டுக் கோப்பான அமைப்பு முறையில், மரபு நிலை திரியாமல் பாடப்பெறுகின்றன. ஆனால் சிற்றிலக்கியங்களோ, நிலை பெறும் போராட்ட உணர்வோடு உலகியல் வழக்கில் உள்ளதை உள்ளவாறு புனையும் உத்தி நிலையில், எளிய மொழியமைப்பில் பாடப்பெறுகின்றன. எனவே தான் சமுதாய நோக்கையும் போக்கையும் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் சீரிய முறையில் வெளிப்படுத்துகின்றன. சிற்றிலக்கியங்கள் தமிழ்த்தாயின் நல்லணிகளாக, தமிழ்ப்பண்பாட்டின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் அழியாச் சான்றுகளாக விளங்குகின்றன. பக்திப் பெருநிலத்தில் பல்வேறு காலங்களின் சூழ்நிலைக்கும், சார்புக்கும் ஏற்ற வகையில் தோற்றம் பெற்றவை பக்திச்

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

சிற்றிலக்கியங்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பக்தி நெறியின் வளர்ச்சிக் கோணங்களை முழுமையாக அறிய இயலும். வரலாறு, சமுதாயம், அகம், புறம், நீதி போன்ற கூறுகளைத் தழுவி எழுந்த பிற சிற்றிலக்கியங்களைவிட, பக்திச் சிற்றிலக்கியங்கள் என்றும் அழியாப் பெருநிலையும் நிலைபேறும் உடையவை ஆகும்.

**குறிப்புகள்**

[1] சாந்தா, மா. சு. *சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு.* வித்யா பதிப்பகம், சென்னை - 600 005, 1983.
[2] சுரேஷ், சி.ரா., இராஜேஷ், ப. *தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டு கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்.* காவ்யா வெளியீடு, சென்னை - 600 024, 2016.
[3] சுயம்பு, பெ., *தமிழ் இலக்கிய வரலாறு.* பாரதி பதிப்பகம், திசையன்விளை – 627657, 2016.
[4] செயராமன், ந. வீ. *சிற்றிலக்கியத் திறனாய்வு.* இலக்கியப் பதிப்பகம், சென்னை – 18, 1980.
[5] செயராமன், ந.வீ. *இலக்கியக் கோவை.* இலக்கியப் பதிப்பகம், சென்னை – 18, 1980.
[6] செல்லப்பா, சி.க. *தமிழில் இலக்கிய விமர்சனம்.* எழுத்துப் பிரசுரம். சென்னை, 1974.
[7] முத்துச்சண்முகம், நிர்மலாமோகன். *சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும்.* முத்து பதிப்பகம், 1979.
[8] ஜான் சாமுவேல், ஜி. *இலக்கியத் திறனாய்வு முதற்பகுதி.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600020, 1976.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.